தென்காசி நகரில் மின் விநியோகம்

*3885—திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்காசி நகரில் இரயில்வே கேட்டுக்கு அருகில் உள்ள பகுதியை, மின்சார வாரியம் இன்னும் ரூரல் ஏரியா வாக வைத்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை டவுன் ஏரியாவாக மாற்றி நகரின் மற்ற பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதைப் போல் அப்பகுதிக்கும் மின்சாரம் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): தென்காசி நகரின் இரயில்வே கேட்டுக்கு அருகில் உள்ள பகுதிக்கு மற்ற பகுதிகளைப் போல் 24 மணி நேரமும் ''மும்முனை'' மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால் மேற்படி பகுதியை ரூரல் ஏரியாவாகக் கருத வாய்ப்பில்லை.

ஏரி கட்டுதல்.

*4258—*திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரூர் வட்டம், தீர்த்தமலை, போடமலை ஆகிய இரு மலைகளில் இருந்துவரும் காட்டாற்று நீரைக்கொண்டு வீரப்ப நாய்க்கம்பட்டி பகுதியில் ஏரி கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் தீர்த்தமலை, போடமலை ஆகிய இரு மலைகளில் இருந்து வரும் காட்டாற்று நீரைக் கொண்டு வீரப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் கூட்டுப்பள்ளம் அருகே ரூ. 23.21 இலட்சத்தில் ஏரி அமைக்கும் திட்டம் தற்போது தல அதிகாரிகளின் பரிசீலனையில் இருந்து வருகிறது. ஆட்சித்தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பிறகு அரசுக்கு அந்த அறிக்கை கிடைக்கும். அதன் பின்னர் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.